ஆண்ட றிக்கை

2020



இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

உள்ளடக்கம்...

01 யுடிழரவ ருள ஏளைழைெ ஆளைளழைெ டீழயசன ழக புழளநசழெசள

02 2020 சிறப்பம்சங்கள்

04 தலைவரின் செய்தி

05 நிறைவேற்று பணிப்பாளரின் அறிக்கை

08 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

09 ஆராய்ச்சி

10 பேரண்ட வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை

17 சுகாதாரம், கல்வி மற்றும் உழைப்பு

23 புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்

27 வறுமை மற்றும் சமூக நலனோம்புகை

29 விவசாயம் மற்றும் விவசாய வணிக அபிவிருத்தி

32 சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள

34 ஆராய்ச்சிக் குழுத் தலைவர்கள்

35 ஆராய்ச்சி பணியாட்டொகுதி

36 உதவி பணியாட்டொகுதி

37 நிதி மற்றும் நிர்வாகம்

37 தொடர்பாடல் மற்றும் வெளிச் சென்று சேவை அளித்தல்

38 நூலகம் சுநளழரசஉநள

39 தகவல் முறைமை

40 வெளியீடுகள் - 2020

41 உள்வாரியான கருத்தரங்குகள்

46 நிதிநிலை அறிக்கைகள்

எங்களை பற்றி

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் என்பது பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கையிலுள்ள மிகவும் உயர்நிலையிலுள்ள பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாகும். கொள்கைகளை வகுப்பதற்காகவும் அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்காகவும் தேவையாக அமையும் வலுவான ஆதாரங்களை வழங்கும் பொருட்டு உயர் தரத்திலான, சுயாதீன கொள்கை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் எமது பணியாகும்.

இருபத்தைந்து (25) வருடங்களுக்கு மேலாக தமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல சிறப்புமிக்க சுயாதீன ஆராய்ச்சிகள் ஊடாக கொள்கை கற்கைகள் நிறுவகம் பொருளாதார கொள்கைகள் சார்ந்த ஆராய்ச்சித் துறையில் சிறப்புமிக்கதொரு மையமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக ஆசியப் பிராந்தியத்தில் தற்போதைய சமூக பொருளாதார கொள்கை உருவாக்கத்திற்கு ஏதுவான பல மிகவும் முக்கியமான துறைகள் உள்வாங்கப்படுகின்றன. அறிக்கைகள், ஆராய்ச்சிப் பத்திரங்கள், சஞ்சிகைகளுக்கான கட்டுரைகள் மற்றும் பகிரங்கமான சமர்ப்பணங்கள் ஊடாக விரிவான முறையில் பிரச்சாரம் செய்யப்படுகின்ற அனுபவ அடிப்படையிலான ஆராய்ச்சிகளின் ஊடாக பொருளாதார கொள்கை உருவாக்கத்திற்கு உதவி வழங்கும் தனது வெற்றிகரமான சாதனையை உருவாக்குவதற்கு இந்நிறுவனத்தின் வலுவான உள்ளக ஆராய்ச்சிக் குழுவின் பரிபூரணமான திறன் இவ் விடயத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

தொலைநோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார நிலைமாற்றத்திற்கு உந்துசக்தியாக அமையும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நிறுவனமாக மாற்றமடைதல்.

குறிக்கோள்

சமூக – பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக நம்பகத்தன்மைமிக்க, நுண்ணறிவினை வழங்கும் உயர் தரத்திலான சுயாதீனமான கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதின் ஊடாக எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரலை சீரமைத்தல் மற்றும் அவற்றின் ஊடாக அனைத்து இலங்கையர்களின் வாழ்கையின் மீதும் சாதகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துதல்

ஆளுநர் சபை

சிரேஷ்ட பேராசிரியர் எச்.டீ கருணாரத்ன
(தலைவர்)

தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ. டீ. லக்ஷ்மன்
(பதவி வழியில்)

கலாநிதி. எம். கே. சீ. சேனாநாயக்க
(பதவி வழியில்)

திரு.ஆர். எச். டபிள்யூ. ஏ. குமாரசிறி
(பதவி வழியில்)

பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த
(நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்)

பேராசிரியர் பீ.எம்.சீ. திலகரத்ன
(நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்)

கலாநிதி கெனத் டி சில்வா
(நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்)

துஷ்னி வீரகோன்
நிறைவேற்றுப் பணிப்பாளர்

விசேட நிகழ்வுகள் 2020

ஜனுவரி



நிறைவேற்று பணிப்பாளர் திருமதி துஷ்னி வீரகோன் சனவரி 30 ஆம் திகதி "கடன் மற்றும் வளர்ச்சி தொடர்பான இலங்கையின் கொள்கைகளின் புரியாத புதிர்: உயர் நடுத்தர வருமான பொருளாதாரங்களுக்குள்ள சவால்கள்" எனும் தலைப்பின் கீழ் காமினி கொரயா ஐந்தாவது ஞாபகார்த்த பேருரையை ஆற்றினார்"

பேப்ருவரி



பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் துறைகளுக்கு இடையிலான ஆராய்ச்சிக்கான லண்டன் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "புலம்பெயர் உலகம்: புலம்பெயர்தல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான துறைகளுக்கு இடையிலான அணுகுமுறைகள்" எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற ஒரு கருத்தரங்கின் போது ஆராய்ச்சி உறுப்பினர் திருமதி பிலேஷா வீரரத்ன" இடப்பெயர்ச்சிகான உரிமை: புலம்பெயர்பவர்களுக்கு ஆட்சேர்ப்பு இடைத்தரகர்களின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதா?" எனும் தலைப்பின் கீழ் ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

மூவுர்ச்




மார்ச் மாதம் மூன்றாம் திகதி ஆராய்ச்சி பொருளியலாளர் திருமதி அஷானி அபேசேகர கல்விக் கொள்கைக்கான மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில் "இலங்கையில் ஐந்தாம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சை: அது எந்தளவிற்கு பயனுறுதிமிக்கது மற்றும் ஏற்புடையது?" எனும் தலைப்பில் ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

ஏப்ருல்



ஆராய்ச்சி பணிப்பாளர் திருமதி நிஷா அருணதிலக ஏப்ரல் 23ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட " ஊழஎனை - 19 தொற்றின் சமூக பொருளாதார தாக்கங்கள் மற்றும் அதற்கான பதிற்செயற்பாடுகள்: நிலைபேறான சமூக பொருளாதார மீட்சிக்கான " புதிய வழமையான" வாழ்க்கைமுறையை கையாளுதல்" தொடர்பான மெய்நிகர் வட்டமேசை கலந்துரையாடலில் உறுப்பினராக பணியாற்றினார்.

மே



ஆராய்ச்சிப் பொருளியலாளர் திரு. கித்மினி ஹேவகே மே மாதம் 07 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தெற்கு - தெற்கு ஒத்துழைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது ஊழஎனை - 19 தொற்றின் சமூக பொருளாதார விளைவுகள்" எனும் தலைப்பில் நடைபெற்ற இணைய கலந்துரையாடலில் கலந்துரையாடல் குழுவின் உறுப்பினராக பணியாற்றினார்.

ஜூனு




கடந்த தசாப்தத்தில் சிறுவர் மந்தபோசாக்கு விடயத்தில் அந்தளவுக்கு முன்னேற்றம் அடையாமைக்கான காரணம் இலங்கையில் சிறுவர் மந்தபோசாக்கினை குறைப்பதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய கொள்கைகளின் குறைபாடு தொடர்பாக ஆராய்கின்ற "இலங்கையில் மந்த போசாக்கினை இல்லாதொழிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த வழிமுறை" எனும் தலைப்பின் கீழ் ஆராய்ச்சி பொருளியலாளர் திருமதி பிரியங்கா ஜயவர்த்தன அவர்களினால் எழுதப்பட்ட ஆராய்ச்சி வெளியீடு கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டது.

ஜூலை



கொள்கைக் கற்கைகள் நிறுவகம் சமன் கெலேகம ஞாபகார்த்த ஆராய்ச்சி கொடை - 2020 இற்கு 3 விண்ணப்பதாரிகளை குறும்பட்டியலிட்டது. சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக கலாநிதி கெலேகம அவர்கள் பங்களிப்பு செய்துள்ள சுயாதீன ஆராய்ச்சி மரபுக்கு மதிப்பளித்தல் 2018-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தக் கொடையின் நோக்கமாகும்.

ஆகஸ்ட்



கொள்கை கற்கைகள் நிறுவகம் தொழில் மற்றும் இரவு நேர வேலை தொடர்பாக இலங்கைப் பெண்களின் அனுபவங்களை ஆராய்ந்தறியும் பொருட்டு நிஷாஅருணதிலக, அஷானி அபயசேகர, சதுர்கா கருணாநாயக்க மற்றும் துலினி பர்னாந்து ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை பூர்த்தி செய்து எழுதப்பட்ட " மருத்துவமனைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் பெண்கள், தொழில் மற்றும் இரவு நேர வேலை" எனும் வெளியீட்டினை வெளியிட்டனர்.

செப்டெம்பர்




ஐபிஎஸ் "மதிப்பீடு" குறித்த கொள்கை மதிப்பீட்டு பட்டறை ஒன்றை நடத்தியது ஒட்டுமொத்த கொள்கை ஒத்திசைவு மற்றும் பரிந்துரைகள் உகந்த கொள்கை தொகுப்பை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல் (OPP) அளவிடுதல், அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (MRV), ஸ்ரீ லங்கா கார்பன் பதிவகம் (எஸ். எல்.சி.ஆர்) மற்றும் இலங்கை கார்பன் கடன் திட்டம் (எஸ். எல்.சி.சி.எஸ்)", ஐ.பி.எஸ் மற்றும் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டது சுற்றுச்சூழல், கொழும்பு, 24 செப்டம்பர்.

ஆக்டோபர்



கொள்கை கற்கைகள் நிறுவகம் அக்டோபர் மாதம் 15ஆம் திகதி "இலங்கை: பொருளாதார நிலை 2020: தொற்றுநோய் மற்றும் தடைகள் - ஊழஎனை - 19 மற்றும் அதற்கப்பால் இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி" தலைப்பின் கீழ் இணைய கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது.

நவம்பர்



நவம்பர் மாதம் 18ஆம் திகதி யுனிசெப் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கையில் அனைவரும் உள்வாங்கப்படும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான உயர் மட்டத்திலான கருத்தரங்கு தொடர்: கோட்பாட்டு சட்டகத்தை மாற்றுதல்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தில் ஆராய்ச்சி உறுப்பினர் திருமதி கங்கா திலகரத்ன ஊழஎனை - 19இற்கான சமூகப் பாதுகாப்பு பதிற்செயற்பாடு" எனும் தலைப்பின் கீழ் ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

டிசெம்பர்



கொள்கை கற்கைகள் நிறுவகம் டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி இலங்கை அரசாங்கத்தின் சார்பில் "தொற்றுநோய் காலத்திற்கு தாக்கு பிடிக்கக்கூடிய மற்றும் நிலைபேறான உணவு முறைமைகளை கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பின் கீழ் ஒரு மெய்நிகர் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது. இந்த கலந்துரையாடலுக்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (ஐகுயுனு) ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் கமத்தொழில் அமைப்பு (குயுழு) மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (றுகுனு) ஆகியவற்றினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

தலைவரின் செய்தி

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் தெற்காசியாவில் உள்ள சுயாதீன, உயர் தரத்திலான கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாக பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு நிறுவனமாகும். நவீன சமூகங்களில் சமூக பொருளாதார மாற்றத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு ஆராய்ச்சியின் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம், பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் கொள்கை மீளுருவாக்கம் ஆகியவை அத்தியாவசியமாக அமைவதால் இந்த காலகட்ட முழுவதிலும் தமது சுய எதிர்பார்ப்பாக அமையும் குறுங்கால மற்றும் நீண்ட கால நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு கொள்கை கற்கைகள் நிறுவகம் அர்ப்பணிப்புடன் செயலாற்றியது.



எச். டீ. கருணாரத்ன
தலைவர்.

COVID - 19 தொற்று காரணமாக முன்பு ஒருபோதும் இல்லாத அளவிற்கு தோற்றம் பெற்றுள்ள உலகளாவிய சுகாதார நெருக்கடியின் மத்தியிலும் கூட கொள்கை கற்கைகள் நிறுவகம் 2020ஆம் ஆண்டு முழுவதிலும் இலங்கையில் பொறுப்பு வாய்ந்த, சுயாதீன மற்றும் முதன்மையான கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாக இடையறாமல் செயலாற்றியது. ஆற்றலை முழுமையாக ஈடுபடுத்துதல், தொழில்நுட்பத்துக்கு இசைந்து ஒழுகுதல், புத்தாக்கம் மற்றும் சுய மனித மூலதனம் கொண்டுள்ள பல்வேறு திறன்களை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றின் ஊடாக அவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு கொள்கை கற்கைகள் நிறுவகம் கொண்டுள்ள ஆற்றலை நிறுவனம் நிரூபித்துள்ளது. தொற்று நோய் நிலை காரணமாக முழு உலகிலும் மெய்நிகர் மூலதனமும் சமூக ஊடகங்கள் வாயிலாக தொடர்பாடலும் பெருமளவு உயர்வடைந்துள்ளது. கொள்கை கற்கைகள் நிறுவகம் இந்த சூழமைவிற்கு ஒன்றும் விதிவிலக்காக அமையவில்லை. பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்படுதல், சமூக இடைவெளியினை கட்டாயமாக்குதல் மற்றும் தொற்று பரவுதல் போன்ற நிலைமைகளின் கீழும் தனது நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ளும் பொருட்டு கொள்கை கற்கைகள் நிறுவகம் வினைத்திறன் மிக்க வகையில் தமது சமூக ஊடகங்களை பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் பொருட்டு மெய்நிகர் வளங்கள் மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் செயலூக்கமும் அர்ப்பணிப்பும் கொண்ட பணியாட்டொகுதி மிக முக்கியமான பணிகளின் நிறைவேற்றியது. 2020 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் தலைவராக பணியாற்றி இந்த வெற்றியை காண்பதற்கு வாய்ப்பு கிட்டியமை எனக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு வாய்ப்பு கிட்டியமை எனது பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

கொள்கை ஆராய்ச்சிகளின் காலத்துக்கு உகந்த நிலையினை உறுதிப்படுத்தும் வகையில் கொள்கை கற்கைகள் நிறுவகம் “தொற்றும் தடங்கல்களும் - COVID - 19 மற்றும் அதற்கப்பால் இலங்கை பொருளாதாரத்தின் மறுமலர்ச்சி” எனும் காலோசிதமான தொனிப்பொருளின் கீழ் 29ஆம் தடவையாகவும் தனது முதன்மை வருடாந்த அறிக்கையாகிய ” இலங்கை: பொருளாதார நிலை 2020” அறிக்கையினை ஒக்டோபர் மாதத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இந்த அறிக்கையின் ஊடாக வெளிப்படும் பகுப்பாய்வின் பொருத்தப்பாடு, உப தொனிப்பொருட்களின் விரிவான வீச்சு, கல்விசார் உள்ளடக்கத்தின் வலுவான தன்மை மற்றும் சமர்ப்பணத்தில் காணப்படும் தொழில்வாண்மை ஆகிய விடயங்கள் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றத்திற்கான கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பங்களிப்பு எவ்வாறு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றதென்பதை எடுத்துரைக்கின்றது.

இவ்வாறானதொரு உலகலாவிய நெருக்கடியின் மத்தியில் கலாநிதி திருமதி துஷ்னி வீரகோன் அவர்கள் வழங்கிய சிறப்பான தலைமைத்துவம் நிறுவனத்தின் பங்கீடுபாட்டாளர்களினால் பாராட்டுக்கு உட்படுதல் வேண்டும். 2020ஆம் ஆண்டினை மேலுமொரு வெற்றிகரமான ஆண்டாக நிறைவு செய்தமை தொடர்பாக திருமதி வீரக்கோன் அவர்களுக்கும் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் அர்ப்பணிப்பு மிக்க பணியாட்டொகுதிக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இந்த உலகளாவிய சுகாதார நெருக்கடியை எதிர்கொள்வதன் மூலமும், அவற்றின் செயல்பாடுகளைக் கவனிப்பதன் மூலமும், இலங்கைக்கும் உலகிற்கும் ஒரு சிறந்த கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாக கொள்கை கற்கைகள் நிறுவகம் தனது இலக்கை அடைந்துள்ளதென நான் நம்புகிறேன்.

நிறைவேற்று பணிப்பாளரின் அறிக்கை

இலங்கையின் முதன்மை பொருளாதார கொள்கை ஆராய்ச்சி நிறுவகமாக கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நற்பெயர் உரிய நேரத்தில், ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி முடிவுகளை அடைந்து கொள்வதற்கு அயராது உழைத்தலின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு கொரோனா வைரஸ் தொற்று (COVID-19) சுகாதார தொற்றுநோய் உலகெங்கிலும் பரவியுள்ள நிலையில், தேசிய முன்னுரிமையின் முக்கியமான கொள்கை முன்னேற்றங்களுக்கு நிறுவனம் கொண்டுள்ள பதிலளிக்கும் திறன் 2020 ஆம் ஆண்டில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் விளைவாக கொள்கை கற்கைகள் நிறுவகம் திட்டமிட்டிருந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் கணிசமான மாற்றங்களை மேற்கொள்வதற்கு நேரிட்டதெனினும் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிகளை மிகக்குறைந்த தடைகளுடன் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நிறுவனம் உறுதி பூண்டதுடன் இலங்கையின் சமூக பொருளாதார சூழமைவு மீது COVID – 19 தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பாகவும் புதிய ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.



துஷ்னி வீரகோன்
நிறைவேற்றுப் பணிப்பாளர்.

2020 ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் புலம்பெயர் ஊழியப் படையின் மீது ஏற்பட்டுள்ள தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கான துரித இணையவழி ஆய்வில் தொடங்கி ஏனைய விடயங்களுக்கு மத்தியில் பேரண்ட பொருளாதாரத்தின் நிலையான தன்மைக்கும் வருமானம் மற்றும் வாழ்வாதாரங்கள் மீதும் இந்த சுகாதாரத் தொற்று ஏற்படுத்தியுள்ள இடையூறுமிக்க தாக்கங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அத்துடன் போதிய அளவில் காணப்படாத சமூகப்பாதுகாப்பினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக பொருளாதார இன்னல் மிக்க நிலையினை பொது களத்தில் வைப்பதை ஆரம்பித்தது. ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்ட விடையங்களை பயன்படுத்தி கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் தொடர்பாடல் செயற்பாடுகளின் அத்தியாவசியமான ஒரு அம்சமாக எமது ஆராய்ச்சிக் குழு COVID – 19 தொற்றின் தாக்கம் தொடர்பான வலைப்பதிவு கட்டுரைத் தொடரொன்றை ஆக்குதல், தேசிய மற்றும் சர்வதேச கலந்துரையாடல் அரங்குகளில் ஈடுபடுதல் மற்றும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் முனைப்புடன் செயலாற்றுதல் போன்ற விடயங்களை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொண்டது. பல்வேறு ஆராய்ச்சிகளுடன் தொடர்புடையதாக கண்டுபிடிக்கப்பட்டவைகள் மற்றும் கொள்கை பரிந்துரைகளை ” தொற்று மற்றும் தடங்கல்கள்: COVID – 19 மற்றும் அதற்கு அப்பால் இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி” எனும் தொனிப்பொருளின் கீழ் நிறுவனத்தின் முதன்மை அறிக்கையாக ” இலங்கை: பொருளாதார நிலை 2020” எனும் அறிக்கையின் ஊடாக சமர்ப்பித்தது.

பின்வரும் (I) பேரண்டப் பொருளாதாரம், வரத்தகம் மற்றும் போட்டித்தன்மை: (II) உழைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம்: (III) புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்: (�ை) வறுமை மற்றும் சமூக நலனோம்புகை: (எ) விவசாயத்துறை மற்றும் விவசாய தொழில்முயற்சி அபிவிருத்தி: அத்துடன் (VI) சுற்றாடல் இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை ஆகிய ஆறு தொனிப்பொருள் துறைகள் ஊடாக திட்டமிட்டு கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கருத்தாழமிக்க ஆராய்ச்சிகள் மிகக் குறைந்தளவு தடங்கல்களுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

பேரண்ட பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை ஆகிய துறைகளை கருத்திற் கொள்ளும்போது இலங்கையின் பேரண்ட பொருளாதார செயற்பாடு மற்றும் நோக்கு, நிர்மாணத்துறை மற்றும் ” ஆக்கத்திறன் சார்ந்த கைத்தொழில்கள்” போன்ற வளர்ச்சி அடைந்து வரும் துறைகளுக்கு ஏதுவான ஒழுங்குறுத்தல் பிரச்சினைகள் மற்றும் போதியளவு புலமைச் சொத்து உரிமைகளுக்கான தேவைகள் போன்றவை தொடர்பான ஆராய்ச்சிகள் 2020 ஆம் ஆண்டிலும் நிகழ்ச்சி நிரலின் முன்னுரிமையை பெற்றுக்கொண்டது. அரச துறையுடன் போலவே தனியார் துறையுடனும் ஈடுபடுவதின் ஊடாக எமது ஆராய்ச்சியாளர்கள் கொள்கை வகுக்கும் செயன்முறைகளுக்கு முக்கியமான உள்ளீடுகளை வழங்கினர். குறிப்பாக கொள்கை கற்கைகள் நிறுவகம் 2021 வரவு

செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அடிப்படையாக அமைந்த எடுகோள்களை மதிப்பீடு செய்வதற்கும் அதன் ஏற்பாடுகள் "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கை சட்டகத்துடன் விரிவான முறையில் இசைந்தொழுகுகின்றதா என்பதைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இலங்கை பாராளுமன்றத்தின் அரச நிதி தொடர்பான குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல் தொனிப்பொருளின் கீழ் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் முறைகள் மற்றும் இலங்கையில் செலவிட நேரும் செலவுகள் தொடர்பாகவும் ஆட்சேர்ப்பு முகவர்களினால் ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான செலவுகள் தொடர்பாகவும் புலனாய்வு செய்யும் ஆராய்ச்சிகள் கணிசமான எண்ணிக்கையில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார பெறுபேறுகளை மேம்படுத்தும் பிரதான முறையாக சர்வதேச ரீதியில் இடம்பெயர்வதற்கு உதவி வழங்கும் பொருட்டு புலம்பெயர் ஊழியர்கள் முகம்கொடுக்கும் பால்நிலை தொடர்பான தடைகள் மற்றும் அதற்கு ஏதுவான கொள்கை பரிந்துரைகள் தொடர்பாக இந்த பகுப்பாய்வின் மூலம் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இப்பணியின் பெரும்பகுதி COVID – 19 தொற்றுக்கு பின்னர் ஊழியர்களின் புலம்பெயர்வு தொடர்பான கொள்கைகளை வகுக்கும் செயன்முறைக்கும் குறிப்பாக புலம்பெயர் ஊழியர்களுக்கான சமூக பாதுகாப்பு முறைமை ஒன்றை தாதிப் பதற்கும் உதவி வழங்கும் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டது.

உழைப்பு, கல்வி மற்றும் சுகாதார கொள்கைகள் சார்ந்த ஆராய்ச்சி துறையினை நோக்குகையில் நாட்டில் புகையிலை சார்ந்ததாக ஏற்படும் சேதத்தை குறைப்பதற்கான கொள்கைகளுக்கு உதவி வழங்கும் பொருட்டு அனுபவ ரீதியிலான ஆதாரங்களை வழங்கும் நோக்கில் கொள்கை கற்கைகள் நிறுவகம் அதன் புகையிலை பாவனையை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக சர்வதேச ரீதியில் ஒத்துழைப்பு வழங்கும் பங்குதாரர்களுடன் தொடர்ச்சியாக பணியாற்றியது. இலங்கை தொற்றாத நோய்கள் வேகமாக அதிகரித்து வரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதால் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் உணவு பழக்கவழக்கங்களை குறைப்பதற்கு அண்மையில் அறிமுகப்படுத்திய மூன்று வகையான நிதி மற்றும் ஒழுங்குறுத்தல் இடையீடுகள் தொடர்பான ஆக்கத்திறனை ஆராயும் பொருட்டு மேலுமொரு கற்கைத் தொடரை மேற்கொண்ட அதேவேளை எமது ஆராய்ச்சியாளர்கள் தேசிய கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான உள்ளீடுகள் உள்ளடங்களாக பல்வேறு கொள்கை சார் குழுக்களில் முனைப்புடன் செயலாற்றியதன் மூலம் திறன் மற்றும் கல்வித் துறை சார்ந்ததாக நேரடி கொள்கை உள்ளீடுகளை வழங்குவதற்கு தொடர்ச்சியாக பணியாற்றியுள்ளது.

வறுமை மற்றும் இடர் வரும் நிலை எனும் நிறுவனத்தின் தொனிப்பொருள் சார்ந்த துறையின் கீழ் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு உதவி வழங்குவதற்காக பட்டுப்பாதை நிகழ்ச்சித் திட்ட கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கான தேசிய கொள்கைக்கான ஆற்றலை வலுவூட்டும் வழிமுறைகளை இனங்காணும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்களுக்கான பிரிவுடன் கொண்டுள்ள கூட்டு முயற்சியை நீடித்துக் கொண்டது. ஏனைய துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது COVID – 19 தொற்று போன்ற அதிர்வினை ஏற்படுத்தும் நிலைகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் முறைமைகளை அடையாளம் காண்பதற்கான அவசர தேவைகளை கருத்தில் கொண்டு ஊழஎனை - 19தொற்று நிலையின் மத்தியில் இலங்கையின் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான ஆய்வுகள் முன்னுரிமையினை பெற்றது.


விவசாயத்துறை மற்றும் விவசாய தொழில் முயற்சி அபிவிருத்தி எனும் தொனிப்பொருள் துறையின்கீழ் உணவு பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சிகளின் போது தாக்குப் பிடிக்கக் கூடிய உணவு முறைமைகளை கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கும் ஆராய்ச்சிகளின் ஊடாக COVID – 19 தொற்று நிலைக்கு மத்தியில் ஏனைய நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் விவசாயத்துறை மற்றும் உணவு முறைகள் எந்த அளவிற்கு வலுவானதாக இருக்கின்றது என்பதை ஆராய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், இந்தக் கொள்கை பரிந்துரைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன்

இணைந்து மேற்கொள்வதற்கும் இலங்கையின் ஒட்டுமொத்த விவசாய கொள்கை சூழமைவுகளை ஆராயும் ஆய்வுக்கான உதவி வழங்குவதில் ஈடுபடுத்திக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் ஆகிய தொனிப்பொருள் சார் துறைகளில் எமது ஆராய்ச்சிகளின் மூலம் மிகவும் அண்மையில் இற்றைப் படுத்தப்பட்டு கொள்கை ரீதியில் கவனம் செலுத்தப்படும் ஒரு பிரச்சினையாக அமையும் இந்நாட்டின் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலுக்கான காப்புறுதியை அடிப்படையாகக் கொண்ட மாற்றுத் தீர்வுகளை பற்றி ஆராய்தல் தொடர்பாக எமது ஆராய்ச்சிகளின் கவனம் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டது. அவ் விடயத்தை குறை நிரப்பும் வகையில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற காலநிலை மாற்றத்தை இயன்றளவு குறைப்பதற்கான ஏனைய ஆராய்ச்சி செயற்பாடுகளின் ஊடாக இலங்கை காபன் பதிவேடு மற்றும் இலங்கை காபன் வெளியேற்றம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பீடு செய்தல், அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு ஆகியவற்றுக்கான உகந்த கொள்கை தொகுதியொன்றை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த கொள்கை சீராக்கங்கள் மற்றும் பரிந்துரைகளை மதிப்பிடுவதற்கு நோக்கம் கொள்ளப்பட்டுள்ளது.

சமநிலையில் உள்ளவர்களினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகள் போன்ற கல்விசார் ரீதியில் தோற்றம் பெற்றுள்ள தரங்கள் வாயிலாக எமது ஆராய்ச்சிகளின் முழுமையான தன்மை தொடர்ச்சியாக ஆராயப்படுகின்றது. இந்த அறிக்கையின் எஞ்சிய பகுதியில் உறுதிப்படுத்தப்படுகின்றவாறு பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச கொள்கைசார் மன்றங்களில் வளப்பகிர்வாளர்களாக கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரும் வரவேற்பு காணப்படுகின்றது. ஊழஎனை - 19தொற்று நிலைக்கு பிராந்திய ரீதியில் பதிலளிக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் குறிப்பாக பரந்த தெற்காசிய பிராந்தியத்தின் பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து செயற்படும் நிலை விரிவானதொரு மட்டத்தில் உள்ளது. எமது ஆராய்ச்சிகள் ஊடாக உருவாக்கப்படுகின்ற தரவுகள், ஆதாரங்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை விரிவான முறையில் அடைந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக எமது தொடர்பாடல் மற்றும் கொள்கை முயற்சிகளின் வெற்றி வளர்ச்சி அடைந்து வருகின்றது எனும் விடயம் இதனூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த அறிக்கையின் எஞ்சிய பகுதியில் எமது ஆராய்ச்சி செயற்பாடுகள் எடுத்துரைக்கபடுவதுடன் 2020 ஆம் ஆண்டில் நாம் அடைந்து கொண்ட சில பிரதான பெறுபேறுகள் வலியுறுத்தப்படுகின்றன.

எமது பணியாட்டொகுதி கொண்டுள்ள நிபுணத்துவம் மற்றும் அனுபவம் இல்லாது இருந்திருப்பின் இந்த வருடம் முழுவதும் நாம் அடைந்துள்ள வெற்றிகளை அடைந்து கொள்வதற்கு எமக்கு இயலாமல் போயிருக்கக் கூடும். நாங்கள் எமக்காக உருவாக்கிக் கொண்டுள்ள தொலைநோக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு எமது திறமையான உள்ளக ஆராய்ச்சிக் குழு மற்றும் உதவி பணியாட்டொகுதி உறுப்பினர்கள் காட்டும் அர்ப்பணிப்பு தொடர்பாக அவர்களுக்கு எனது நன்றியினை செலுத்துவதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்கின்றேன். கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் கொள்கை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையில் சாதகமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்படும் இப்பணியை மேற்கொள்வதற்கு உதவி வழங்கும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுகை சபையிலிருந்து கிடைத்த ஒத்துழைப்பினை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.



துஷ்னி வீரகோன்
நிறைவேற்றுப் பணிப்பாளர்.

ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம



ஆராய்ச்சி

இலங்கையின் சமூக பொருளாதார கொள்கை பின்னணியில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பணியானது கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் விடயத்தில் விழிப்புணர்வு ஓட்டுவதற்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கு மாற்றுக் கொள்கைகளின் விளைவுகளை புரிந்து கொள்வதற்கு உதவும் பொருட்டு பகுப்பாய்வு ரீதியிலான ஆதாரங்களை வழங்குவதாகும். ஏனைய விடயங்களை மேற்கொள்ளும் அதேவேளை கொள்கைகளின் பொருத்தபாடற்ற தன்மை, உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவு இல்லாமை, சுகாதார மற்றும் கல்வித் துறைகளுக்கான அரச சேவை வழங்கல்களின் நலிவடைந்த தன்மை, குறைந்த பயிற்சி,வலுசக்திக்கான செலவு அதிகரித்து வருதல், நிதி மற்றும் நிலத்தினை பெற்றுக்கொள்வதற்கான தடைகள் போன்ற வளர்ச்சிக்கு தீர்மானகரமான முறையில் தடங்களை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாக வலுவான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். வருமானம் மற்றும் செல்வம் தொடர்பில் தொடர்ச்சியாக காணப்படும் சமத்துவமின்மை, சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள், இயற்கை வளங்கள் குறைவடைதல், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் இடர் வரும் நிலைக்கு முகம் கொடுத்துள்ள மக்களின் நல்வாழ்வு போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு கொள்கை மறுசீரமைப்பு களை மேற்கொள்ளும் நோக்கில் பிரதான பொருளாதார எண்ணக்கருக்கள், மாதிரிகள் மற்றும் சுட்டிகளை தொடர்ச்சியாக மீளாய்வுக்கு உட்படுத்துதல் அத்தியாவசியமானதாகும்.

நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சிநிரல் ஊடாக நாட்டின் தேசிய கொள்கை சட்டகமாக அமையும் “சுபீட்சத்தின் நோக்கு” திட்டத்திற்கு அமைவாக இப் பிரச்சனைகளும் ஏனைய பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக ஆறு அடிப்படை தொனிப்பொருள் சார்ந்த துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தபடுவதுடன் கீழே சாராம்சம் செய்யப்பட்டுள்ளவாறு பல்வேறு ஆராய்ச்சி தலைப்புகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

பேரண்டப்பொருளாதார கொள்கை மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள்



முதலீட்டாளர்களுக்கு சாதகமான கொள்கை சூழலொன்றை பேணி உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் வருவதற்கு காணப்படும் ஒழுங்குறுத்தல் தடங்கல்களை இயன்றளவு குறைக்கும் அதேவேளை பேரண்ட பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் "சுபிட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ள பிரதான கொள்கை வழிமுறையாகும். அரசுத் துறையினால் பயன்படுத்தப்படுகின்ற வளங்களின் (அரசு முதலீடுகள், அரச தொழில் முயற்சி) வினைத்திறனை அதிகரித்தல், பொருளாதாரத் துறைசார்ந்த ஊக்குவித்தலை அதிகரித்தல் (வர்த்தக மறுசீரமைப்பு, விவசாயத்தில் விலையிடல் முறை, மின்சாரம் போன்ற அரச பொது பயன்பாடுகள்) மற்றும் நிறுவன ரீதியிலான வினைத்திறனை உயர்த்துதல் (சுங்கம், வரி நிர்வாகம்) போன்றவற்றை நோக்காகக் கொண்ட பொருளாதார கொள்கைகள் நிலைபேறான வளர்ச்சிக்கான முயற்சியினை இயக்கம் பிரதான காரணிகளாகும். பேரண்டப் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை ஆகிய துறையில் ஆராய்ச்சி ஆய்வுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

பேருண்டுப்பேஉருளுஉதுஉரு கேஉளுஜகு முற்றும் குடுஜமுப்பு சீர்துரீருத்துஞ்குளுஞ்


கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பிரதான ஆண்டறிக்கையாக அமையும் "இலங்கை: பொருளாதார நிலை 2020" அறிக்கையின் ஊடாக " தொற்றும் தடங்கல்களும் - ஊழஎனை - 19மற்றும் அதற்கப்பால் இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி" எனும் தொனிப்பொருளின் கீழ் COVID; - 19 தொற்றுக்கு பின்னர் மிகவும் சிறப்பாக கட்டியெழுப்புவதற்கு ஒரு நாட்டின் கொள்கைகள் மாற்றமடையும் முறை தொடர்பாக ஆராயப்பட்டது. துஷ்னிவீரகோன் அவர்களினால் எழுதப்பட்ட " COVID – 19 தொற்றுக்கும் அதற்கப்பாலும் பேரண்ட பொருளாதாரக் கொள்கைகளின் பதிலளிப்பு" மற்றும் ஹரிணி வீரசேகர அவர்களினால் எழுதப்பட்ட "COVID - 19மற்றும் உலக பொருளாதார அபிவிருத்திகள்" ஆகியவற்றின் பிரதான அத்தியாயங்கள் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச கொள்கை சூழமைவுகள் மற்றும் இலங்கை முகம் கொடுக்கும் சவால்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதைப்போலவே, COVID – 19 தொற்றின் பாதகமான செலவின் அளவானது அத்தகைய பேரழிவுகளை கையாளுவதற்கு ஒரு நாடு கொண்டுள்ள ஆயத்த நிலையில் தங்கியிருக்கின்றது. "இலங்கை: பொருளாதார நிலை 2020 " அறிக்கையில் தொற்று நோய்களுக்கு தாக்குப்பிடிப்பதற்கு இலங்கை பொருளாதாரம் கொண்டுள்ள ஆற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கையின் மறுசீரமைப்புகளை ஆராயும் " COVID – 19 மற்றும் அதற்கப்பால்: தொற்றுக்கான செலவினை இயன்றளவு குறைத்துக் கொள்ளுதல்" எனும் தலைப்பின் கீழ் நிஷா அருணதிலகவினால் எழுதப்பட்ட ஒரு அத்தியாயம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. "தொற்று நோயிலிருந்து மீண்டெழுவதற்காக: COVID – 19 தொற்றுநோய்க்கான நெருக்கடிகளுக்கு பதிலளிப்பதற்கான வழிமுறைகள்" எனும் தலைப்பின் கீழ் அதுல சேனாரத்னவினால் எழுதப்பட்ட அத்தியாயத்தின் ஊடாக தொறுநோய்க்கு பதிலளிக்கும்போது முகம் கொடுத்துள்ள தற்போதைய கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியிலான சவால்கள் ஆராயப்பட்டுள்ளன. இந்த பகுப்பாய்வு ரீதியிலான இரண்டு அத்தியாயங்களிலும் தேசிய மற்றும் சர்வதேச சூழமைவுகளின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கொள்கை சார்ந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உலகப் பொருளாதார மன்றத்தினால (WEF) வெளியிடப்படுகின்ற "உலகளாவிய போட்டித்தன்மை பற்றிய அறிக்கை 2020" இற்கு கொள்கை கற்கைகள் நிறுவனம் முந்தைய வருடங்களில் போலவே தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. இந்த அறிக்கையின் ஊடாக உலகளாவிய போட்டித்தன்மை பற்றிய சுட்டிகளுக்கு அமைவாக நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி தரவுகளின் ஊடாக ஒரு பொருளாதாரத்தின் போட்டித்தன்மை மற்றும் தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டத்தில் உள்ள மாற்றங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. பங்காண்மை நிறுவனம் என்ற வகையில் கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் சார்பில் கித்மிண ஹேவகே இந்த அறிக்கைக்கு பங்களிப்பு வழங்கினார்.

நிஷா அருணதிலக, ஹரிணி வீரசேகர, மற்றும் சாமினி நிலன்கா ஆகியோர் ஐக்கிய இராச்சியத்தின் "கென்சர் ரிசர்ச்" அமைப்புடன் இணைந்து " வரியின் நெகிழ்திறனை கணிப்பீடுதல் மற்றும் புகையிலை வரி மாற்றங்கள் வரி வருமானம் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்" பற்றிய ஆய்வினை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் ஊடாக வரியில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் அரச வருமானத்தின் மீது ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக பல்வேறு புகையிலை உற்பத்திகளின் விலை நெகிழ்ச்சி மற்றும் குறுக்கு விலை நெகிழ்ச்சி மதிப்பீடு செய்யப்படுகின்றது. கணிப்பிடப்பட்ட நெகிழ்ச்சியினை பயன்படுத்தி இந்த ஆய்வின் ஊடாக புகையிலை வருமானம், பரம்பல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார விளைவுகளின் மாற்றங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக கணிப்பிட பட்ட இந்த நெகிழ்ச்சி உலக சுகாதார அமைப்பின் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான மாநாட்டு உடன்படிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கையில் சிகரெட் போன்ற புகைப்பிடித்தல் பொருட்களுக்கு ஒரே மாதிரியான வரி வீதத்திற்கு செல்வதின் பெறுபேறுகளை எதிர்வு கூறுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. சமமான நிலையில் உள்ளவர்களின் மீளாய்வுக்கு பின்னர் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் கொள்கை கற்கை நிறுவனத்தின் ஆராய்ச்சி தொடரின் ஒரு வெளியீடாக பிரசுரிக்கப்பட்டது.

- இலங்கையில் சிகரெட்டுக்கான நெகிழ்ச்சி மதிப்பீடு: எழுதியவர்கள் இ நிஷாஅருணதிலக, ஹரிணி வீரசேகர மற்றும் சாமினி திலன்கா (2020). சுகாதார மற்றும் கல்வி ஆராய்ச்சி தொடர் இல. 17, கொழும்பு: இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்.



COVID – 19 தொற்றின் பொருளாதார தாக்கம் தொடர்பாக கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து கலந்துரையாடல் அமர்வுகளின் கலந்துரையாடல்களிலும் ஏனைய மன்றங்களில் கலந்து கொள்வதன் ஊடாகவும் கொள்கை சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல் உள்நாட்டு மற்றும் சர்வதேச கலந்துரையாடல்களில் தொடர்பாடலில் ஈடுபடும் பிரதான வழிமுறையாக இருக்கின்றது. பிரதான சில கலந்துரையாடல்கள் மற்றும் சமர்ப்பணங்கள் பின்வருமாறு.

- "கடன் மற்றும் வளர்ச்சி குறித்த இலங்கையின் கொள்கையில் தடுமாற்றம்: ஒரு உயர் நடுத்தர வருமான பொருளாதாரத்திற்கான சவால்கள", காமினி கொரயா ஐந்தாவது நினைவு சொற்பொழிவு, பி.எம்.ஐ.சி.எச், 30 ஜனவரி (துஷ்னி வீரகோன்).
- ஜூன் 9 (நிஷாஅருணதிலக) இந்திய உலக விவகார பேரவை ஏற்பாடு செய்த "இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் **கோவிட் –19**" பற்றிய வெபினார்.



- ஜூன் 12, வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த (நிஷாஅருணாதிலக) ஏற்பாடு செய்த "ரோட்மேப் டு போஸ்ட் COVID – 19 பொருளாதார மீட்பு" பற்றிய வெபினார்.
- செப்டம்பர் 22, (துஷ்னிவீரகோன்) "எ நியூ குளோபல் ஓர்டர் போஸ்ட் COVID – 19 தொற்றுநோய்: பற்றிய வெபினார்: தெற்காசியாவிற்கான சிக்கல்கள", வர்த்தக, பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் பற்றிய தெற்காசிய கண்காணிப்பு, காத்மாண்டு, அமைப்பினால் ளுயுறுவுநுறு), ஏற்பாடு செய்யப்பட்ட.
- அக்டோபர் 2 (துஷ்ன ிவீரகோன்), ளுயுநுேஆ, பங்களாதேஷ் ஏற்பாடு செய்த COVID – 19 மற்றும் மேம்பாட்டு சவால்கள் குறித்த மெய்நிகர் தெற்காசியா

நெட்வொர்க் ஆ.ப் எகனாமிக் மாடலிங் (ளுயுநுேஆ) சர்வதேச மேம்பாட்டு மாநாடு 2020 இல் " பேரண்ட பொருளாதார தாக்கங்கள" குறித்த வெபினாரில் அமர்வில் தலைமை தாங்கினார்.



- அக்டோபர் 15, ஐ.பி.எஸ் நடத்திய ஐ.பி.எஸ் "ஆண்டு முதன்மை அறிக்கை வெளியீட்டோடு இணைந்து" இலங்கை: பொருளாதார நிலை 2020 "குறித்த வெபினார் குழு கலந்துரையாடல்.
- அக்டோபர் 21 (துஷ்ன ிவீரகோன்) சி.எம்.ஏ வினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய முகாமைத்துவ கணக்கியல் மாநாடு 2020 இல் "பொருளாதாரத்தில் COVID – 19தாக்கத்தை சமாளித்தல" குறித்த குழு விவாதம்.
- அக்டோபர் 27 (துஷ்னிவீரகோன்) பங்களாதேஷின் கொள்கை உரையாடல் மையம் (சிபிடி) மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு (ஓஇசிடி), ஏற்பாடு செய்த "COVID - 19க்கு பலதரப்பு பதில் - தெற்காசியாவிலிருந்து வரும் பார்வைகள" பற்றிய மெய்நிகர் கலந்துரையாடல்.)
- நவம்பர் 17 (துஷ்னி வீரகோன்), பாங்காக், ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP) ஏற்பாடு செய்த பிந்தைய COVID – 19 நெகிழ்திறன் பொருளாதாரங்கள் குறித்த மெய்நிகர் நிபுணர் குழு கூட்டத்தில் "அதிர்ச்சிகளுக்கு பொருளாதார தாக்குபிடித்தல்" பற்றிய வெபினார்.
- நவம்பர் 18, ஐ.பி.எஸ்., பாராளுமன்றத்தில் 2021 வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்த ஐ.பி.எஸ். நடாத்திய வரவு செலவு திட்டத்திற்கு பிந்திய டுவிட்டர் கலந்துரையாடல்
- நவம்பர் 18 (கே.பி.எம்.ஜி) ஏற்பாடு செய்த "வரவுசெலவுத் திட்ட பகுப்பாய்வு 2021: தாக்குபிடித்தல் மற்றும் மீட்புக்கான வழிமுறை" பற்றிய குழு விவாதம் (துஷ்னிவீரகோன்).
- நவம்பர் 26 (துஷ்னிவீரகோன்), ஹாங்காங் மற்றும் (HSBC) வங்கி கார்ப்பரேஷன் (எச்எஸ்பிசி) ஏற்பாடு செய்த "எச்எஸ்பிசி இலங்கை வெபினார்: இலங்கைக்கான பொருளாதார கண்ணோட்டம் மற்றும் போட்டி நன்மைகளை உருவாக்குதல்" ஆகியவற்றைப் பற்றிய குழுக் கலந்துரையாடல்.
- ஆசியா செக்யூரிட்டீஸ் ஏற்பாடு செய்த 4 ஆம் ஆண்டு இலங்கை முதலீட்டு மாநாடு 2021 இல் "V(ACCINE) வடிவ மீட்பு: மருத்துவ காரணிகள் மற்றும் பொருளாதார தாக்கங்கள்" பற்றிய குழுக் கலந்துரைாடல், டிசம்பர் 15 (துஷ்னிவீரகோன்)

பொது விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பாக அறிவிக்கும் பரந்த அளவிலான முயற்சியின் ஒரு பகுதியாக "டோக்கிங் இகோனமிக்ஸ்" எனும் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் வலைப்பதிவு தளத்தில் வலைப்பதிவு கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. மேற்படி கட்டுரைகளுக்கு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பரந்தளவிலான பிரச்சாரம் கிடைத்தது. அதில் பிரசுரமாகிய பிரதான கட்டுரைகளில் சில பின்வருமாறு.

- கொழும்பில் வாகனம் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம்: செலுத்துவதற்கா? அல்லது செலுத்தாமல் இருப்பதற்கா? பிலேஷா வீரரத்ன, டோக்கிங் இகோனமிக்ஸ், 21 ஜனவரி.
- ஒரு குமுறும் புயல்: இலங்கையில் ஊழுஏஐனு - 19இன் பொருளாதார தாக்கம், கித்மின ஹேவகே, டோக்கிங் இகோனமிக்ஸ் 27 மார்ச்.
- 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் 2020 இன் ஊழஎனை "

19 தொற்று: இலங்கைக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகின்றது ? நிஷா அருணாதிலக, டோக்கிங் இகோனமிக்ஸ் , 3 ஏப்ரல்.

- COVID - 19உடன் சமாளித்தல்: நெருக்கடிகளின் போது இலங்கையில் சமூக ஊடக அடிப்படையிலான வணிகத்தின் பொருளாதாரம், கித்மின ஹேவகே மற்றும் ஹரினி வீரசேகர, டோக்கிங் இகோனமிக்ஸ்“ 4 மே
- சுகாதார செலவினங்களைக் குறைத்தல் மற்றும் ஊழஎனை - 19இற்கு அப்பால் அரச வருவாயை அதிகரித்தல்: இலங்கையில் சிகரெட் வரிகளை உயர்த்துவதைப் பற்றிய விடயம் ஹரினி வீரசேகர மற்றும் சாமினி திலங்கா, டோக்கிங் இகோனமிக்ஸ், 29 மே.
- சிறந்த முறையில் மீண்டும் கட்டியெழுப்புதல்: ஊழுஏஐனு - 19இற்கு அப்பால் இலங்கையின் பொருளாதாரம், ஹரினி வீரசேகர, டோக்கிங் இகோனமிக்ஸ் , 19 அக்டோபர்.
- COVID - 19இற்கான நிதிக் கொள்கை பதிலளிப்பு: சர்வதேச சூழலில் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?, சாமினி திலங்கா, டோக்கிங் இகோனமிக்ஸ், 2 நவம்பர்
- இரு சாராருக்கும் வெற்றி (வின்-வின்) வியூகம்: அடுத்துறும் வரவுசெலவு திட்டத்தில் புகையிலை வரிவிதிப்பை ஏன் அரசாங்கம் அதிகரிக்க வேண்டும், ஹரினி வீரசேகர, டோக்கிங் இகோனமிக்ஸ், நவம்பர் 12.
- புகையிலை வரிவிதிப்பு: வரவுசெலவுத் திட்டம் 2021 எதனை தவறவிட்டது ?, ஹரினி வீரசேகர, டோக்கிங் இகோனமிக்ஸ், 21 டிசம்பர்.

வுர்த்துகும் முற்றும் ரீருஉந்துரீயு ஒருஞ்கீஜணுப்பு

சதன் வொயிஸ் வலையமைப்புடன் இணைந்து “இலங்கையின் தெற்கு - தெற்கு ஒத்துழைப்புக்கு நிர்வாகம் மற்றும் நிறுவன ரீதியிலான சட்டகம்” எனும் தலைப்பின் கீழ் கித்மின ஹேவகே மற்றும் ஹரிணி வீரசேகரவினால் மேற்கொள்ளப்பட்ட கற்கையின் ஊடாக சுதந்திரத்தின் பின் இலங்கையின் அபிவிருத்தி மூலோபாயங்களின் போது வெளிநாட்டு உதவிகளின் வகிபாகம் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், அண்மைக்காலத்தில் குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவில் இருந்து கிடைத்த உதவிகள் தெற்கு தெற்கு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. கற்கை சம்பவ தொடர் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு வடக்கு - தெற்கு மற்றும் தெற்கு - தெற்கு ஒத்துழைப்பினை அடிப்படையாகக் கொண்ட அதிகரித்து கருத்திட்டங்களுடன் தற்போது நடைமுறையில் உள்ள நிறுவனம் மற்றும் நிர்வாக சட்டகங்களை ஒப்பிடுகின்றது.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஐரோப்பிய யூனியனினால் நிதி வசதி வழங்கப்படுகின்ற இலங்கையின் வர்த்தகம் தொடர்பான உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக கித்மின ஹேவகே ஜெனிவா நகரில் சர்வதேச வர்த்தக நிலையத்துடன் ” நிர்மாணம், கட்டடக்கலை மற்றும் பொறியியல் துறைகளின் ஒழுங்கு உறுத்தல் மதிப்பீட்டினை” மேற்கொண்டார். இலங்கையில் அனைவரையும் உள்வாங்கிய வர்த்தகத்தை முதன்மையாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வலுவூட்டுதல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் ஏற்றுமதி போட்டி தன்மைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி அத்துடன் விருத்திக்கான உயர்ந்த வாய்ப்புடைய துறைகளில் பெறுமதி சேர்க்கும் நடவடிக்கைகள் இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்திருந்தது. சதன் வொயிஸ் வலையமைப்பின் நிதி வசதியின் கீழ் ” ஆடைத் தொழில் துறை மீது COVID – 19 தொற்றுநோயின் தாக்கம்” எனும் ஆய்வினை பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஒருங்கிணைந்து மேற்கொண்டது. இலங்கையின் சூழமைவு தொடர்பாக கித்மினி ஹேவகேவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் COVID – 19 நெருக்கடியில் மத்தியகால மீட்சியினை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை தீர்மானங்கள் மற்றும் தொழிற்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆடை தொழில்துறையின் பெருமதி சேர்க்கும் சங்கிலித் தொடரில் உள்ள அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி சமன் கெலேகம அவர்களின் நினைவாக சர்வதேச மட்டத்தில் வெளியிடப்பட்ட ஒரு தொகுதிக்கு அத்தியாயங்களை வரைந்து

தங்களது பங்களிப்பினை வழங்கினர். பின்வரும் தலைப்புகளின் கீழ் மேற்படி அத்தியாயங்கள் அமைந்திருந்தன.

- ஸ்பிரிஞ்சர் வெளியீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தெற்காசியாவின் வர்த்தக மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு எஸ் ரிஹான் மற்றும் ஜீ. டே (2020), சிங்கப்பூர், வெளியீட்டிற்கு துஷ்ன ிவீரகோன் எழுதிய "தெற்காசியாவில் கொள்கை வகுக்கும் விடயத்தில் அரசியல் பொருளாதாரம்" எனும் அத்தியாயம்
- ஸ்பிரிஞ்சர் வெளியீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தெற்காசியாவின் வர்த்தக மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு எஸ் ரிஹான் மற்றும் ஜீ. டே (2020), சிங்கப்பூர், வெளியீட்டிற்கு ஜனக விஜயசிறி மற்றும் சுவேந்திரனி ஜயரத்னவினால் எழுதப்பட்ட" இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்துக்கு வசதிகளை வழங்குதல்" எனும் அத்தியாயம்

நிறுவனம் வலைப்பின்னல்களில் இணைந்து வலுவான முறையில் தெற்காசியாவின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விடயத்தை கவனத்தில் கொள்ளும்போது கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் COVID – 19 தொற்றுக்கு பதிலளிக்கும்போது நாட்டின் அனுபவங்கள், பாடங்கள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆராய்தல் ஆகிவற்றை நோக்காகக் கொண்ட பல்வேறு கலந்துரையாடல் அரங்குகளில் முனைப்புடன் பங்கேற்றது. அவற்றை முன்வைக்கப்பட்ட சில பிரதான சமர்ப்பணங்களிலும் பங்கேற்ற கலந்துரையாடல்களிலும் சிலவற்றைக் கீழே காணலாம்.

- தெற்காசிய கொள்கை கற்கைகள் நிலையத்தினால் செய்யப்பட்ட "தெற்காசியாவில் COVID – 19 தொற்றுக்கு பதிலளித்தல்" தொடர்பான வட்டமேசை கலந்துரையாடல், மே 21 (துஷ்னி வீரகோன்)
- உலகவங்கியின் தெற்காசிய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " தெற்காசியா மீது COVID – 19 தொற்று ஏற்படுத்தும் முன்னறிவிப்புகள்" பற்றிய இணையவழி கருத்தரங்கில் " COVID – 19 மற்றும் அதற்கு அப்பால் தெற்காசியாவின் பிராந்திய ஒத்துழைப்பு" பற்றிய குழு கலந்துரையாடல், ஜூன் 2, (துஷ்னிவீரகோன்)
- (ருநேளுஊயீ)தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகம் மற்றும் தெற்காசிய கொள்கை கற்கைகள் நிலையம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட " COVID – 19 தொற்று நிலையிலிருந்து வழமையான நிலைக்கு திரும்புவதை துரிதப்படுத்துதல் மற்றும் மிகச் சிறந்த முறையில் கட்டியெழுப்பப் படுவதற்கு தெற்காசிய ஒத்துழைப்பு" எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற மெய்நிகர் கொள்கை கலந்துரையாடல், புதுடில்லி, செப்டம்பர் 9 (துஷ்னிவீரகோன்)
- இந்திய சமுத்திர கற்கைகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " வங்காள விரிகுடா பிராந்தியத்தின் கோவிட் நிலைக்கு பின்னரான மூலோபாய தொலைநோக்கு" எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற இணையத்தள கலந்துரையாடல், புதுடில்லி, அக்டோபர் 26 (துஷ்னிவீரகோன்)
- இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை பொருளாதார மாநாடு 2020 நிகழ்ச்சித்திட்டத்தில் " உள்நாட்டு வளங்களிலிருந்து உச்சகட்ட பயனைப் பெற்றுக் கொண்டு உயர்ந்த அளவு பெறுமதி சேர்த்தலை மேம்படுத்துதல்" எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடல், டிசம்பர் 1 (துஷ்னி வீரகோன்)
- ரிசர்ச் இன்பர்மேஷன் சிஸ்டம்ஸ் எனும் கொள்கை கற்கைகள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " பிம்ஸ்டெக் கொள்கை வலைப்பின்னலின் ஐந்தாம் அமர்வில்" பங்கேற்றல் புதுடில்லி, டிசம்பர் 21 - 22 (துஷ்னிவீரகோன்)
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தெற்கு - தெற்கு ஒத்துழைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது COVID – 19 தொற்றுநோய் ஏற்படுத்தும் சமூக பொருளாதார முன்னறிவிப்புகள்" பற்றிய இணையத்தள கருத்தரங்கு, மே 7 (கித்மிண ஹேவகே)
- இராஜதந்திரம் மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பான ஆசிய நிறுவனம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " பொருளாதாரத்திற்கு COVID – 19 மூலமாக ஏற்படுத்தப்படும் தாக்கம் பற்றி ளுயுயுசுஊ-யுளுநுயுடே எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற இணையத்தள கலந்துரையாடல், ஜூன் 30 (கித்மிண ஹேவகே)

ஏற்றுமதியை கைத்தொழில் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் இலங்கையை குறிப்பால் உணர்த்தும் விடயத்துடன் உலகலாவிய வளர்ச்சி தொடர்பான வலைப்பதிவு கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. பின்வரும் தலைப்புகள் தொடர்பாக வரையப்பட்ட கட்டுரைகள் இதில் உள்ளடங்கின.

- தொழில்நுட்பத்தினால் இலங்கை ஆடைத் தொழில் துறையின் வழங்கல் சங்கிலியை சீராக்கும் முறை: தொழில் முயற்சி தொழிற்பாடுகளை அண்மித்த நாடுகளுக்கு மாற்றுதல் மற்றும் மீண்டும் இந்நாட்டுக்கு மாற்றுதல், நிபுணி பெரேரா, டோக்கிங் இகொனமிக்ஸ்" ஜனவரி 27
- கொரோனா தொற்றுநோய் மற்றும் சீனாவின் பொருளாதாரம் மந்தகதியினை அடைதல்: இலங்கை மீது ஏற்படுத்தும் பொருளாதார தாக்கம், ஜனக விஜயசிறி, டோக்கிங் இகொனமிக்ஸ், பெப்ரவரி 13
- பிராந்திய முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு (சுஊநீ) இலங்கையின் மிகப் புதிய ஆசிய மைய புதிர், துஷ்னிவீரகோன் மற்றும் கித்மிண ஹேவகே, டோக்கிங் இகோனமிக்ஸ், டிசம்பர் 7



முதலீடு மற்றும் நிதி

நிறுவனத்தினால் சமூக சேவைகளை மேற்கொள்வதற்கு மிகவும் வெளிப்படைத் தன்மையும் வினைத்திறன் மிக்கதுமான சூழலை உருவாக்கும் பொருட்டு ஈடுபடுத்திக் கொள்ளக்கூடிய அனுபவங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் குறைபாடுகளை புரிந்து கொள்ளும் பொருட்டு ஆசியா முழுவதிலும் நடத்தப்பட்ட பிராந்திய கற்கையின் ஒரு பகுதியாக " மக்கள் நேயமிக்க செயற்பாடு அளவு சுட்டி 2020"எனும் இந்நாடு தொடர்பிலான தேசிய அறிக்கையினை உருவாக்குவதற்கு கொள்கை கற்கைகள் நிறுவகம் ஹொங்கொங்கில் அமைந்துள்ள பரோபகாரம் மற்றும் சமுதாயத்திற்கான நிலையத்துடன் பங்காண்மையுடன் செயலாற்றியது. கித்மிணி ஹேவகேவினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

SME குளு், தேஉழீலு் மற்றும் தேஉழீலு் முஜனுவேஉரு்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகத்துறை பொருளாதார வளர்ச்சி, உள்ளூர் அபிவிருத்தி, தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வறுமையை வீழ்ச்சி அடையச் செய்தல் போன்ற மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு துறையாகும். "இலங்கையில் படைப்பாற்றல் மற்றும் கலாசார கைத்தொழில்கள்" எனும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வரைபடமிடல் கற்கையின் ஊடாக இத்துறையின் அங்கீகாரத்துக்கும் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவி வழங்கும் பொருட்டு தேவையான இடையீடுகளை திட்டமிடுவதற்கு உதவி வழங்கும் பொருட்டு வசதிகளை மேற்கொள்வதற்காகவும் அதன்மூலம் அதன் விரிவாக்கத்தை மேம்படுத்தக்கூடிய கொள்கைகள் மற்றும் மூலோபாய ங்களை உருவாக்கும் பொருட்டு தகவல்களை வழங்குவதற்காக இலங்கையின் படைப்பாற்றல் கைத்தொழில்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை மற்றும் அளவு ஆராயப்பட்டது. திலனி ஹிரிமுத்துகொட இணை பதிப்பாசிரியராக கடமையாற்றிய இந்த அறிக்கை இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலினால் வெளியிடப்பட்டது

கித்மிண ஹேவகே "இலங்கை: பொருளாதார நிலை 2020" அறிக்கைக்கு " உலகளாவிய தடங்கல்களின் மத்தியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை பாதுகாத்துக் கொள்ளுதல்" எனும் தலைப்பின் கீழ் ஒரு அத்தியாயத்தை எழுதினார். COVID – 19 தொற்று நோயின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் காணப்படும் குறைந்த சேமிப்பு, சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் போன்றவற்றில் சம்பிரதாயபூர்வமாக காணப்படுகின்ற பாதுகாப்பற்ற நிலையினை மேலும் தீவிரமாகி உள்ளதுடன் அதன்மூலம் அதனுடன் தொடர்புடைய விசேட கொள்கை சவால்கள் பலவற்றை தோற்றுவித்துள்ளது. தற்போதைய நெருக்கடிகளின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பாதகமான தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கும் COVID – 19 தொற்றுக்கு பின்னர் மீட்சிக்கான வசதிகளை வழங்கும் பொருட்டு இந்த பகுப்பாய்வின் மூலம் இலங்கைக்கு வரையறுக்கப்பட்டவாறு காணப்படும் வாய்ப்புகளை முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு பின்பற்றக்கூடிய கொள்கை மாற்று வழிகள் ஆராயப்படுகின்றன.





வீளுக்குக்குகூடுசீகுளுந் / வீவுகூதுளுங்குளுந்

- இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கையின் படைப்பாற்றல் மற்றும் கலாசார கைத்தொழில்கள்" பற்றிய அறிக்கையினை வெளியிடுதல் எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற இணையத்தள கருத்தரங்கில் குழு உறுப்பினராக பணியாற்றினார். மே 2 (திலனி ஹிரிமுத்துகொடகே)

வுஜலுப்புதீவுகுளுந்

- தொற்று நிலைக்கு மத்தியில் இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை பாதுகாத்துக் கொள்ளுதல்: புத்தாக்க தீர்வுகளுக்கான தேவைப்பாடுகள், கித்மிண ஹேவகே, டோக்கிங் இகோனமிக்ஸ், செப்டெம்பர் 14

புலுஜமுசு கூகூதுது

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு சார்பில் கொள்கை கற்கைகள் நிறுவகம் "இலங்கைக்கான தேசிய புலமைச் சொத்து கொள்கை" ஒன்றை தயாரிப்பதற்கு தலைமைத்துவம் கொண்டு செயற்பட்டது. திலனி ஹிரிமுத்துகொடகேவினால் நெறிப்படுத்தப்பட்ட இந்தக் கற்கையின் பிரதான குறிக்கோள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் புத்தாக்க பரிமாணங்களுக்கு சமாந்தரமாக மூலோபாய ங்களை நடைமுறைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாகும். இதன் ஒட்டுமொத்த தாக்கம் ஊடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் புத்தாக்க ஆற்றல்களை மேம்படுத்தும் சிறந்த வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதி வழங்குதல் இதன் நோக்கமாகும்.

திலனி ஹிரிமுத்துகொடகேவினால் "இலங்கை: பொருளாதார நிலை 2020" அறிக்கைக்கு "தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் புலமைச் சொத்து உரிமைகள் ஊடாக தொற்று நிலை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்" தலைப்பின் கீழ் எழுதிய அத்தியாயத்தின் மூலம் கோவிட் - 19 தொற்று நிலையின் பாதகமான தாக்கத்தை குறைப்பதற்கு உலகம் முழுவதும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாகத்தை விரிவாக்குவதற்கு ஈடுபடுத்தியுள்ள முறை ஆராயப்படுகின்றது. இந்த பகுப்பாய்வின் மூலம் குறிப்பாக மருத்துவ விஞ்ஞானம், சுகாதார தொழில்நுட்பம், உணவு மற்றும் உணவு தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் புத்தாகத்தை மேம்படுத்துவதற்கு புலமைச் சொத்தினை பாதுகாப்பதன் முக்கியத்துவம் ஆராயப்படுகின்றது.



வுஜலுப்புதீவு குடுஜருகுளுந்

- இலங்கையில் அந்தரங்கத் தன்மை மற்றும் தரவுகளைப் பாதுகாப்பதற்காக அதிகரித்து வரும் தேவை, நுவன்த்தி சேனாரத்ன, டோக்கிங் இகொனமிக்ஸ், ஜனவரி 13
- ஊழஎனை - 19நெருக்கடி மற்றும் புத்தாக்கம்: புலமைச் சொத்து உரிமைகள் ஏன் தேவைப்படுகின்றது. திலினி ஹிரிமுத்துகொடகே,டோக்கிங் இகோனமிக்ஸ், நவம்பர் 23

உழைப்பு; கல்வி மற்றும் சுகாதாரம்



தரமான வாழ்க்கையினை வாழ்வதற்காக ஊழிய சந்தையில் பயனுறுதிமிக்க வகையில் ஈடுபடுவதற்கு ஆட்கள் தேவையான மனிதவளத்தை அடைந்து கொள்கின்றார்கள் என்பதை உறுதி செய்வதற்காக சிறந்த ஆரோக்கியமும் தரமான கல்வியும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் இருத்தல் முக்கியமானதாகும். எவ்வாறாயினும், நிதி , மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான தடங்கல்களுக்கு மத்தியில் புதிய வளர்ச்சியுடன் முன்னோக்கிச் சென்று இந்த அனைத்தையும் தரமான முறையில் வழங்குவதை உறுதி செய்தல் மிகவும் கடினமாக இருப்பதால் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு தற்போது காணப்படும் வழிமுறைகள் சவாலை எதிர்நோக்கி வருகின்றது. ஊழியம், தொழில் நிலை, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் கொள்கைகளை நோக்கியதாக காணப்படும் குறைபாடுகளை தீர்ப்பதன் ஊடாக இந்தக் கொள்கை சவால்களுக்கு தீர்வுகளைத் தேடும்போது அரச அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு உதவி வழங்குவதற்கு கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிகள் நோக்கம் கொண்டதாக அமைகின்றன.

தேடமூலுடனும் சுந்ஜதுகளும்

பிரியங்கா ஜயவர்தனவினால் "இலங்கை: பொருளாதார நிலை 2020" அறிக்கைக்கு COVID - 19மற்றும் தொழில் உலகம்" பற்றியதொரு அத்தியாயம் எழுதப்பட்டது. இந்தப் பகுப்பாய்வின் ஊடாக இலங்கையில் ஊழியச் சந்தையின் மீது COVID – 19 தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை ஆராய்தல், தாக்கம் கடத்தப்படும் முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் சர்வதேச சிறந்த வழக்கங்கள் ஊடாக வழங்கக்கூடிய தீர்வுகளைப் பற்றி ஆராய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் அத்தகைய அவசர சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுப்பதற்கு இலங்கையை மிகச் சிறந்த முறையில் தயார் செய்யும் பொருட்டும் ஊழிய சந்தையின் பாதகமான அதிர்வுகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டும் கொள்கை ரீதியிலான கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான துறைகளை அடையாளம் காணுதல் இதன் பிரதான நோக்கமாகும்.

வீளுக்குக்குடுசீகளும் / வீவுடதுங்குளும்

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட" COVID – 19 தொற்றுநோயின் சமூக பொருளாதார தாக்கங்கள் மற்றும் அதற்கு பதில் அளித்தல்: நிலைபேறான சமூக-பொருளாதார மீட்சிக்காக "புதிய வழமை" வாழ்க்கைமுறையை கையாளுதல்" எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற வட்டமேசை கலந்துரையாடல், ஏப்ரல் 23 (நிஷாஅருணதிலக)

வுஜலுப்புதீவுகளும்


- COVID – 19 மற்றும் இலங்கையின் முச்சக்கரவண்டி தொழில் துறைக்கான எதிர்காலம், திசலி டி சில்வா மற்றும் நிஷாஅருணதிலக, டோக்கிங் இகொனமிக்ஸ், ஏப்பிறல் 21
- COVID - 19 மற்றும் இலங்கையின் ஊழிய சந்தையின் குறைபாடுகள்: தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்தர பாதுகாப்பு, பிரியங்கா ஜயவர்தன, டோக்கிங் இகொனமிக்ஸ், செப்டம்பர் 9
- நெருக்கடிக்கு மத்தியில் தொழில்களையும் தொழில் முயற்சிகளையும் பாதுகாத்துக் கொள்ளுதல்: இலங்கை மிகச் சிறந்த முறையில் எவ்வாறு பதில் அளிக்க முடியும்? அஷானி அபயசேகர, டோக்கிங் இகொனமிக்ஸ், டிசம்பர் 14

பேணுகுளும் முற்றும் தேடமூலுடனுங்குளும்

"இலங்கை: பொருளாதார நிலை 2020" அறிக்கைக்காக சுனிமாலி மதுராவல" வினால் எழுதப்பட்ட "தொற்றுநோய், பெண்கள் மற்றும் ஊழியப் படையில் பெண்கள்" எனும் அத்தியாயத்தின் மூலம் COVID – 19 தொற்று நிலை மற்றும் அதைச் சார்ந்த கொள்கை நடவடிக்கைகளின் மூலம் உலகளாவிய பொருளாதார செயற்பாடுகள் தடங்களுக்கு உள்ளாகியுள்ள விடயங்கள் ஆராயப்படுகின்றன. இந்தக் கொள்கை செயற்பாடுகளின் தாக்கம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபட்ட விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்தக் கற்கையின் மூலம் COVID – 19 தொற்று நோய் நிலையின் ஆண் பெண் பால் நிலை ரீதியிலான விளைவுகள் தொடர்பாக ஆராயப் படுவதுடன் நெருக்கடி யான சந்தர்ப்பங்களின்

போது ஊழிய சந்தையில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் சார்ந்ததாக பால்நிலை போக்குகள் எவ்வாறு செயற்படுகின்றது என்பதைப் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இலங்கையின் ஊழியப படையின் பால்நிலை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக மேற்கொண்டு வரும் ஆய்வுகள் தொடர்பான இரண்டு வெளியீடுகளை உருவாக்கினர்.



- நிஷா அருணதிலகவினால் எழுதப்பட்ட " இலங்கையில் பெண் ஊழியப் படையின் பங்கேற்பிற்கு தாக்கம் விளைவிக்கும் முறைமை சார் பிரச்சனைகள்" (2020), பிலெட், ஏமா ஜே, வானி ஸ்வரூபா முரளி மற்றும் சில்வியா டியரி, தெற்காசியா தொடர்பாக குரல் எழுப்புதல்: பெண்களின் நிலை, சவால்கள் மற்றும் எதிர்காலம் தொடர்பான விடய பரப்புகளுக்கிடையிலான கண்ணோட்டங்கள், வர்ல்ட் சயன்டி.பிக் பப்ளிஷிங், சிங்கப்பூர்.
- மருத்துவமனைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் பெண்கள், தொழில் மற்றும் இரவு நேர வேலை, நிஷா அருணதிலக, அஷானி அபயசேகர, சதுர்கா கருணாநாயக்க மற்றும் துலினி பர்னாந்து ஆகியோரினால் எழுதப்பட்டது (2020) கொழும்பு: இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்.

வீளுக்குக்குடுசீகுளு / வீவுடதுஞ்குளு

- நிதி ஆணைக்குழுவினால் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் ளுனு புயீ இணைந்து ஏற்பாடு செய்த ஆண் பெண் பால் சமூகநிலை பதிற்செயற்பாடு சார்ந்த திட்டமிடல் மற்றும் வரவு செலவு திட்டம் தயாரித்தல் பற்றிய ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் "மாகாணசபைகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பால்நிலை சார்ந்த பதிற்செயற்பாடு திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரித்தல் " பற்றிய சமர்ப்பணம், பெப்ரவரி 28, (பிலேஷா வீரரத்ன)
- னுகுஊஊ வங்கி பிஎல்சி வினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் - 2020 சந்தர்ப்பத்தில் " சமத்துவமான உலகம் என்பது வலுவூட்டப்பட்ட உலகமாகும்" எனும் தலைப்பின் கீழ் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணம், மார்ச் 6 (சுனிமலீ மதுராவல)
- ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பங்குதாரர்களின் செயலகத்தின் ஆண் பெண் பால் நிலை செயற்பாட்டு குழுக் கூட்டத்தின்போது "ஆண் பெண் பால் சமூக நிலையினை கவனத்தில் கொண்ட ஊழஎனை - 19இன் பொருளாதாரக் கண்ணோட்டம்" எனும் தலைப்பின் கீழ் இணையவழி அடிப்படையிலான கலந்துரையாடல், ஏப்ரல் 15, (நிஷாஅருணதிலக)

வுஜலுப்புதீவுகுளு

- SO SRI LANKA அதற்கும் மேலாக, ஹோட்டல் துறையில் பெண்கள் அனைவரும் எந்த நிலையில் இருக்கிறார்கள்? ஜனக விஜயசிறி, டோக்கிங் இகோனமிக்ஸ், பெப்ரவரி 24.
- இலங்கையில் இரவு சேவையில் உள்ள பெண்கள் : அதிக பங்கேற்பிற்கு வசதியளிக்கும் கொள்கைகள்", நிஷாஅருணதிலக, அஷானி அபயசேகர மற்றும் சதுர்கா கருணநாயக்க, டோக்கிங் இகோனமிக்ஸ், மார்ச் 5.
- COVID-19, வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் பெண்கள் ஊழியப் படையின் பங்கேற்பு: இலங்கைக்கான பாடம், சுனிமாலி மதுராவல, டோக்கிங் இகோனமிக்ஸ், செப்டம்பர் 7.
- இலங்கையில் ஆடைத் தொழிலில் பெண்களின் இடத்தைப் பாதுகாத்தல், சுனிமாலி மதுராவல மற்றும் நிபூனி பெரேரா, ஆசிய அபிவிருத்தி வங்கியின் டிவலொப்மன்ட் ஏசியா, ஆகஸ்ட் 31

தீறுனுகுளுந் முற்றுமும் குலுவீ

“இலங்கை: பொருளாதார நிலை 2020” அறிக்கைக்கு எழுதப்பட்ட ” நெருக்கடிக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய கல்வி முறைமையை இலங்கையில் கட்டியெழுப்புதல்” எனும் அத்தியாயத்தின் மூலம் அஷான அபயசேகர தற்போது நிலவும் COVID - 19தொற்று நிலை நாட்டின் கல்வி நடவடிக்கைகளை தடங்கலுக்கு உள்ளாகியுள்ள நிலை ஆராயப்படுகின்றது, தொலைக்கல்வியினை பயன்படுத்திக்கொண்டு கல்வியினை இடையறாமல் பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பினும், அத்தகைய முறைகள் ஊடாக அனைவருக்கும் சமமான முறையில் பயனைப் பெற்றுக் கொள்ள முடியாது. இந்த பகுப்பாய்வின் மூலம் ஊழஎனை - 19தொற்று நிலை கல்வி முறைமைக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் ஆராயப் படுவதுடன் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய கல்வி முறையொன்றை கட்டியெழுப்புவதற்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

